T-UN-465

உ

கடவுள் துணை.

# நூதன மிட்டாய் பாட்டு.



இஃது,

குடந்தை புஸ்தகவியாபாரம்

கோ. சீனிவாசபிள்ளையவர்களால்

சங்கநிதிவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1907.



உ

கடவுள் துணை.

நூதன

# மிட்டாய்பாட்டு.

விநாயகர் துதி வெண்பா.

பேரின்பவீடதனைப் பேணியளிக்குமிட்டாய்
சீரின்பமாமிதனைச் செப்பவே - கோரின்பம்
சித்திதரும்முத்திதரும் செல்வவிநாயகனைப
பத்தியுடனே தொழுதக்கால்.

சிந்து.

அமிர்தரஞ்சித யிங்கிர்தமிட்டாய்
அன்னமேரீ வாங்குமிட்டாய்
தவமுனிவர் புகழுமிட்டாய்
தையலற்கு யேத்தமிட்டாய் அமி

சீனிபாகுச் சிறந்தமிட்டாய்
    சித்தரெல்லாம் புகழுமிட்டாய்
நானுனக்குச் சொன்னமிட்டாய்
    நாரிப்பாக மானமிட்டாய் அபி
அப்பர்சுந்திரர் களிக்குமிட்டாய்
    ஆனந்தத்தைக் கொடுக்குமிட்டாய்
கற்பகமே யுண்ணுமிட்டாய்
    கலியுகத்தோ ரேற்றுமிட்டாய் அபி
மாயவலையை யறுக்குமிட்டாய்
    மாரனையுங் காய்ந்தமிட்டாய்
நேயமாகும் நெய்யிமிட்டாய்
    நீயேவாங்கும் பெண்ணேமிட்டாய் அபி
மனத்துயரை போக்குமிட்டாய்
    மங்கைபாக மானமிட்டாய்
சினத்தையுமறுக்குமிட்டாய்
    சித்திரமேவாங்குமிட்டய் அபி
கண்ணப்பர்க் கருளுமிட்டாய்
    காட்சியது கொடுக்குமிட்டாய்
உன்னையுன்ன ருசிக்குமிட்டாய்
    உத்தமியே வாங்குமிட்டாய் அபி

நால்வேத மானமிட்டாய்
நல்லபத மளிக்குமிட்டாய்
மேலோர்கள் புகழுமிட்டாய்
மின்னிடையே வாங்குமிட்டாய் அமி

பர்ப்பிதூத்படா ஹெக்கல்மிட்டாய்
பதவியளிக்குஞ் சக்கரைமிட்டாய்
குறிப்பறிந்துக் கொள்ளுமிட்டாய்
கோருவரங் கொடுக்குமிட்டாய் அமி

அகிலமெல்லாம் நிறைந்தமிட்டாய்
அறிவையற்று வேத்தமிட்டாய்
இகபர மளிக்குமிட்டாய்
யேந்திழையே பூந்திமிட்டாய் அமி

இமூர்த்தி ஜிலேபிமிட்டாய்
இனிமையான லட்டுமிட்டாய்
நம்பியிதைகொள்ளுமிட்டாய்
நாயகமே தருந்தமிட்டாய் அமி

அந்தியிலேவாங்கு மிட்டாய்
சந்தையிலே திரியுமிட்டாய்
சொந்தமான சுசிர்தமிட்டாய்
பந்தமதை யறுக்குமிட்டாய் அமி

பாதுமலுவா பன்னீர்மிட்டாய்
பாவப்பிணியை யறுக்குமிட்டாய்
வேதன்மாலுந் தேடுமிட்டாய்
வஞ்சியேநீ வாங்குமிட்டாய் அமி

திரைமுழுதும் நிறைந்தமிட்டாய்
மஹாமுனிவர் புகழுமிட்டாய்
அரிந்தவற்கே சிரந்தமிட்டாய்
ஆசைக்கண்ணே வாங்குமிட்டாய் அமி

மனோரஞ்சித மானமிட்டாய்
மங்கையே பால்கோவாயல்வா
வனமயிலே பூரிமிட்டாய்
வதிரசமே வாங்குமிட்டாய் அமி

மூந்திரிபருப்பு யவலுநொக்கல்
மெத்தருசியாஞ் சீனிமிட்டாய்
சொந்தமாகத் தொடருமிட்டாய்
தொடுக்கவச மாகுமிட்டாய் அமி

காராசேவு வோமபொடி
காரமுள்ள பொகடாதுடி
நேராநெய்யில் செய்தபொடி
நேரிழையே வாங்காயடி அமி

மின்னல்போலவே ஜொலிக்கும்
    மேதினியாசை தனை விலக்கும்
கன்னியரை தேடகிடைக்கும்
    காசியும்வேண்டாம் நமக்கு அமி
நிரைவிலையிலாத மிட்டாய்
    நேர்த்தியாங் கற்கண்டுமிட்டாய்
அறிந்தவ ரறிந்தமிட்டாய்
    அனேகவிதமானமிட்டாய் அமி
கையைவீசி கடைக்குப்போர
    கன்னியரே யிந்தமிட்டாய்
மெய்யிலுள்ள பிணியறுக்கும்
    மெல்லியரே வாங்குமிட்டாய் அமி
பிரவியறுக்கு மிட்டாய்
    பூகமைந்து மானமிட்டாய்
அறியாற்கு மறிந்தவற்கும்
    ஆனந்தங் கொடுக்குமிட்டாய் அமி
குணத்தைப் பெருக்குமிட்டாய்
    கூட்டுறவு செய்யுமிட்டாய்
பணச்செலவு மில்லாமலே
    பாவையரே கிடைக்குமிட்டாய் அமி

பிள்ளைகரிக் கேட்டமிட்டாய்
பேரின்ப மளிக்குமிட்டாய்
உள்ளமது களிக்குமிட்டாய்
உமைபாக மானமிட்டாய் அமி

செஞ்சி யேகாம்பரமும்
சிற்றறிவி னாலுரைத்த
ரஞ்சித மிட்டாய்பாட்டை
வஞ்சியே புல்கரிய அமி

நூதன மிட்டாய் பாட்டு.

முற்றிற்று.

